*கவனிக்க.- 2024.10.25 ஆந் திகதிய 2408 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2409 - 2024 නොවැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2024.11.01**

*2409 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 460 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 460 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (04) ஆவது உட் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

சப்பிரகமுவ மாகாண சபையின், கேகாலை மாவட்டத்தில், புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் ஜே. எம். ரம்யா ஜயசுந்தர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைகள் சட்டத்தின் 19 (4) உட் பிரிவின் பிரகாரம் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1982.09.20 ஆந் திகதி அளிப்புச் செய்யப்பட்டுள்ள කෑ/ පු/2539 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான நேவ்ஸ்மியர் குடியேற்றத்தில் வசிக்கும் ஹேவாஹெட்டயலாகே என்ஸா என்பவருக்கு அளிப்புச் செய்யப்பட்டு அவிஸ்ஸாவலை மாவட்ட காணிப் பதிவகத்தில் கா. அபி. கட். சட் 12/24 ஆம் இலக்கத்தின் கீழ் 1984.11.02 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்டரீதியான உரிமையாளராக உரித்தாளர் ஒருவர் இன்மையினால் அல்லது உரித்தாளர் ஒருவர் இருந்தும் அவர்/ அவள் பின்னுரித்தாளராவதற்கு விரும்பாத காரணத்தினால் பின்னுரித்திற்கு ஒருவரும் நிபமிக்கப்படவில்லை என அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளமையினால் குறித்த அளிப்புப் பத்திரத்தை, மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் அறிவித்தல் செய்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2024.12.13 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் தெரிவித்தல் வேண்டும்.

**மேற்குறித்த அட்டவணை**

கேகாலை நிருவாக மாவட்டத்தில் புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், பஹத்த புலத்கம் கோரலே ரங்கல்ல கிராம உத்தியோத்தர் பிரிவில் (தற்போது நேவ்ஸ்மியர் இஹல) பிலவல, ரங்கல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், - பொறுப்பில் இருக்கின்ற மற்றும் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/ - அவர்களினால் தயாரிக்கப்பட்ட ஆ. வ. ப. கே. 583 கொண்ட துண்டு பிரிக்கும் வரைபடத்தில்/- அவர்களினால் தயாரிக்கப்பட்ட - இலக்க எல்லைக் குறிப்பில் 65 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான, 01 ஏக்கர், 02 ரூட், 38 பர்சஸ் விஸ்தீரணம் உள்ளதுமான, கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைகளுக்குற்பட்டதுமான அரச காணி: நேவ்ஸ்மியர் குடியேற்றம்

வடக்கு : ஆ. வ. ப. கே. 583 இல் காணித் துண்டு இலக்கம்: 64 மற்றும் 39;

கிழக்கு : இவ்வரைபடத்தில் காணித் துண்டு இலக்கம்: 39, 82 மற்றும் 68;

தெற்கு : இவ்வரைபடத்தில் காணித் துண்டு இலக்கம்: 82, 68 மற்றும் 66;

மேற்கு : இவ்வரைபடத்தில் காணித் துண்டு இலக்கம்: 66, 63 மற்றும் 64.

ஜே. எம். ரம்யா ஜயசுந்தர,
பிரதேச செயலாளர்/(மாகாணங்களுக்கிடையில்)
காணி ஆணையாளர்/உதவி காணி ஆணையாளர்,
புலத்கொஹுபிட்டிய.

2024, சனவரி 11.

11 - 27

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/76200.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NWP/PLC/L9/KW/LTL/09.

### 21 (2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

குருநாகல் மாவட்டத்தின் குளியாபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்: 1143, கிரிந்தவ கிராம அலுவலர் பிரிவின் கிரிந்தவ கிராமத்தின் இ. கி. ப. 2353 இன் துண்டு இலக்கம் 266 ஊடாக காண்பிக்கப்பட்டுள்ள 0.035 ஹெக்டேயர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை சங்கத்தின் நடவடிக்கைகளுக்காக வரையறுக்கப்படாத கிரிந்தவ சணச கூட்டுறவு சங்கத்தினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன:**

வடக்கு : துண்டு இலக்கம் - 265, 264, 136;
கிழக்கு : துண்டு இலக்கம் - 264, 136, 241;
தெற்கு : துண்டு இலக்கம் - 241;
மேற்கு : துண்டு இலக்கம் - 241, 265, 264.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்காத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2024.08.07 முதல் 2054.08.06 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைத் தொகை**.- தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், கௌரவ அமைச்சரால் குத்தகை அங்கீகரிக்கப்பட்ட ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 2 % ஆகும்.

**தவணைத் தொகை**.- அறவிடப்பட மாட்டாது.

(இ) இந்தக் காணியை சங்கத்திற்கான கட்டிடமொன்றை நிர்மாணித்தல் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள / நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2024.08.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் தவிர ஏனைய உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும், குத்தகை செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளாதிருக்கும் சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியை குத்தகைக்கு வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

ஆர். டி. எல். சமிந்து லக்ஷான் ஜயரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 14.

11 - 22

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/63252.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NCP/PLC/L - 10/plan/2022/2/දී.කා.

**21 (2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

அனுராதபுரம் மாவட்டத்தின் இப்பலோகம பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்: 496 துலான - 02 எல காகம கிராம அலுவலர் பிரிவின் காகம மத்தி பகுதி கிராமத்தில் இ. கி. ப. 834 இன் துண்டு இலக்கம்: 66 மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 40 பர்ச்சஸ் பரப்பளவு கொண்ட காணித் துண்டை சங்கத்தின் நோக்கத்திற்காக வரையறுக்கப்பட்ட காகம கிராமிய வளங்கள் அபிவிருத்தி கூட்டுறவு வங்கிச் சங்கம் எனும் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன**:

வடக்கு : இ. கி. ப. 384 இன் துண்டு இல. 66 இன் ஒரு பகுதி மற்றும் துண்டு இல. 71;
கிழக்கு : இ. கி. ப. 834 இன் துண்டு இல. 71 மற்றும் தெருவின் பாதுகாக்கப்பட்ட பகுதி;
தெற்கு : தெருவின் பாதுகாக்கப்பட்ட பகுதி;
மேற்கு : இ. கி. ப. 834 இன் துண்டு இல. 66 இன் ஒரு பகுதி .

கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2021.08.10 ஆம் திகதி முதல் 30 வருடங்கள் வரை)

**வருடாந்த குத்தகைத் தொகை**.- தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2021 ஆம் ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 2% ஆகும்.

(ஆ) குத்தகை பெறுபவர்களால் குத்தகை ஆரம்பித்து 01 வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகை பெறுபவர்களால் இந்தக் காணியை சங்கத்தின் நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஊ) 2021.08.10 திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை உப குத்தகை வழங்குவதற்கு முடியாது;

(எ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்;

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியை குத்தகைக்கு வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 12.

11 - 43

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/75389.
மத்திய மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: CPC/LC/LD/4/1/9/267.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

கண்டி மாவட்டம், யட்டிநுவர பிரதேச செயலக பிரிவின் கண்ணொறுவ கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் கண்ணொறுவ கிராமத்தின் யநு/பி.செ/2023/10/33 வரைபடத்தின் துண்டு இலக்கம் E மூலமாக காட்டப்பட்டுள்ள நிலவரைபடத்தின் 0.1323 ஹெக்டெயர் அளவுடைய அரச காணித்துண்டானது அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வர்த்தக நடவடிக்கைக்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், மத்திய மாகாணம் இனால் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் கோரப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு**:

வடக்கு : வீதி ஒதுக்கு;
கிழக்கு : மூ. පී. මහ 3384 இல் காணித்துண்டு இலக்கம் 29;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் D (யநு/பி. செ/2017/06/24);
மேற்கு : இவ. வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் D.

03. கோரப்பட்டிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன்பொருட்டு அரசினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2024.08.01 ஆம் திகதியிலிருந்து 30 வருடங்கள்)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக காணப்படுமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபா அல்லது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்தன் 20% சேர்க்கப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்.**- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) இக்காணி வர்த்தக நடவடிக்கைக்காகவே அன்றி வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தப்படக்கூடாது;

(ஈ) இக்குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதியினுள் மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் ஆகியோரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர், பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதியினுள் குத்தகைதாரரினால் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2024.08.01 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் செய்ய அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

(ஒ) குத்தகைப்பணம்தொடர்ந்து செலுத்தப்படவேண்டியதுடன், குத்தகை செலுத்த தவறும் சந்தர்ப்பங்களில் குத்தகை ஒப்பந்தம் சுயமாகவே இரத்துச்செய்யப்படும். குத்தகை செலுத்துதலானது தொடர்ந்தும் மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்களில் செலுத்தப்படவேண்டியுள்ள பணத்தின் 10% தொகை தண்டப் பணமாக அறவிடப்படும்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கப்படக்கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைச்சுட்டிக்காட்டி எனக்குஎழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப்பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

கே. ஜீ. பீ. சௌமியா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 15.

11 - 44

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/76344.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.:
HDLC/03/46/06/26.

## 21 (2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவின் இஹலகும்புக்வெவ கிராம அலுவலர் பிரிவின் இஹலகும்புக்வெவ கிராமத்தின் 0113 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் லொட் இலக்கம்: 02 மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சுமார் 03 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை விவசாய நோக்கத்திற்காக திரு. கடுகன்னகே ஜீவந்த விஜேதுங்க என்பவரின் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:**

வடக்கு : அப்புஹாமி அனுபவிக்கின்ற அரசாங்கக் காணி;
கிழக்கு : வீதி;
தெற்கு : ரவீன் குமுதித் அனுபவிக்கின்ற அரசாங்கக் காணி;
மேற்கு : அரசாங்கக் காணி.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் கருதப்படுகின்றது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2024.08.07 ஆம் திகதி முதல் முன்னோக்கி 30 வருடங்கள்)

**வருடாந்த குத்தகைத் தொகை**.- தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% ஆகும். இந்தக் குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 50% இலும் அதிகரிக்கலாகாது.

**தவணைத் தொகை**.- வருடாந்த குத்தகைத் தொகையின் மூன்று மடங்காகும்.

**தண்டப் பணம்**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 10% ஆகும்.

(ஆ) குத்தகை பெறுபவர்களால் குத்தகை ஆரம்பித்து 01 வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகை பெறுபவர்களால் இந்தக் காணியை விவசாய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள்ள நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2024.08.07 ஆந் திகதியிலிருந்து ஐந்து வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. அதன் பின்னரும், இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்ற நோக்கத்திற்காக மாத்திரமே உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் செய்வதற்கு முடியும்;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகை செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளாதிருக்கும் சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்டனை வட்டி அறவிடப்படும்;

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 15.

11 - 45/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/76280.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.:
HDLC/03/46/06/24.

**21 (2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்: 100 - இஹலகும்புக்வெவ கிராம அலுவலர் பிரிவின் இஹலகும்புக்வெவ கிராமத்தின் 0141 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் லொட் இலக்கம்: 01 மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சுமார் 03 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை விவசாய நோக்கத்திற்காக திருமதி பல்லே படல்கே மிலானி நிஷாதினி கொடகே என்பவரின் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:**

வடக்கு : எல். ஏ. சுகததாச அனுமதியின்றி அனுபவிக்கின்ற அரசாங்கக் காணி;
கிழக்கு : வீதி;

தெற்கு : கிளை வீதி;
மேற்கு : மிலானி நிஷாதினி மேலதிகமாக பயிர் செய்கின்ற காணி.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் கருதப்படுகின்றது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2024.08.07 ஆம் திகதி முதல் முன்னோக்கி 30 வருடங்கள்)

**வருடாந்த குத்தகைத் தொகை**.- தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% ஆகும். இந்தக் குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 50% இலும் அதிகரிக்கலாகாது.

**தவணைத் தொகை**.- வருடாந்த குத்தகைத் தொகையின் மூன்று மடங்காகும்.

**தண்டப் பணம்**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 10% ஆகும்.

(ஆ) குத்தகை பெறுபவர்களால் குத்தகை ஆரம்பித்து 01 வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகை பெறுபவர்களால் இந்தக் காணியை விவசாய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பித்து ஒரு வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள்ள நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2024.08.07 ஆந் திகதியிலிருந்து ஐந்து வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. அதன் பின்னரும், இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்ற நோக்கத்திற்காக மாத்திரமே உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் செய்வதற்கு முடியும்;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகை செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளாதிருக்கும் சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்டனை வட்டி அறவிடப்படும்;

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 15.

11 - 45/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/74107.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: HDLC/03/46/06/22.

## 21 (2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவின் அந்தரவெவ கிராம அலுவலர் பிரிவின் உஸ்க கிராமத்தின் 0350 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏக்கர்: 06, ரூட்: 02, பர்ச்சஸ்: 25 பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை வர்த்தக நோக்கத்திற்காக ஒதென்ட்டிக் லங்கா எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவட்) லிமிடட் கம்பனி பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன:**

வடக்கு : பிரியதர்சனவின் காணி;
கிழக்கு : கிளை வீதி மற்றும் அந்தரவெவ பாதுகாக்கப்பட்ட காணி;
தெற்கு : அந்தரவெவ பாதுகாக்கப்பட்ட காணி மற்றும் ஈ. ஜீ சுதீரவின் காணி;
மேற்கு : ஈ. ஜீ. சுதீரவின் காணி மற்றும் கிளை வீதி.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் கருதப்படுகின்றது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2024.08.07 ஆம் திகதி முதல் முன்னோக்கி 30 வருடங்கள்)

**வருடாந்த குத்தகைத் தொகை**.- தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% ஆகும். இந்தக் குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 50% இலும் அதிகரிக்கலாகாது.

**தவணைத் தொகை**.- வருடாந்த குத்தகைத் தொகையின் மூன்று மடங்காகும்.

**தண்டப் பணம்**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 10% ஆகும்.

(ஆ) குத்தகை பெறுபவர்களால் குத்தகை ஆரம்பித்து 01 வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகை பெறுபவர்களால் இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள்ள நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2024.08.07 ஆந் திகதியிலிருந்து ஐந்து வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகை செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளாதிருக்கும் சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்டனை வட்டி அறவிடப்படும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 15.

11 - 45/3

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/76976.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: UPLC/L/26/KG/294.

**21 (2) ஆம இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

